**இன்று (19.8.2006) சட்டப்பேரவையில் ம.தி.மு.க. உறுப்பினர் மாண்புமிகு திரு.கண்ணப்பன் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு ம.தி.மு.க.வினுடைய சட்டப்பேரவைக் கட்சித் தலைவர் திரு.கண்ணப்பன் அவர்கள் எழுப்பியிருக்கின்ற பிரச்சினை மிக மிக முக்கியமான பிரச்சினை என்றாலும்கூட இதுபோன்ற பிரச்சினைகளை எந்த அளவுகோல் கொண்டு நாம் தீர்மானிப்பது, விமர்சிப்பது என்பதற்கு ஒரு நிலை உண்டு. பொதுவாக, இலங்கைப் பிரச்சினை என்பது குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது இன்னும் சிறப்பாகச் சொல்லவேண்டுமேயானால் ஈழத் தமிழர் பிரச்சினை என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் இரண்டு கால கட்டங்களை உள்ளடக்கியதாகும்.

ஒரு காலகட்டம் ராஜீவ் காந்திக்கு முன் – இன்னொரு காலகட்டம் ராஜீவ் காந்திக்குப்பின் என இரண்டு காலகட்டங்கள். ராஜீவ் காந்திக்குப் பின் என்கிற காலகட்டம் உருவாகாமல் இருந்திருக்குமேயானால் இப்பொழுது ஈழத் தமிழகத்தின் நிலையே வேறு. ஏனென்றால், ஒரு சம்பவத்தை நான் நீண்டநாட்களுக்குப் பிறகு சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அதுபற்றி என்னுடைய நண்பர் சகோதரர் கண்ணப்பன் அவர்களுக்கும் தெரியும்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று நான் முதல்வராகப் பொறுப்பேற்று பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்திக்க டெல்லிக்குச் சென்றிருந்த நேரம். அப்போது என்னுடன் தம்பி முரசொலி மாறனும் வந்திருந்தார். ராஜீவ்காந்தி அவர்களைச் சந்தித்தபோது மரியாதைச் சந்திப்பு – ஐந்து நிமிடத்தில் முடிந்து சென்னை திரும்பலாம் என்பதற்காக மாலை விமானத்திலே நான் பயணச்சீட்டெல்லாம் ஏற்பாடு செய்து அதற்குத் தயாராக இருந்தேன். ஆனால் ராஜீவ் அவர்களைச் சந்தித்துப் பேசியபிறகு அவர்கள் இலங்கைப் பிரச்சினையை என்னிடத்திலே பேசத் தொடங்கி நீ முன்னின்று அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வை. அப்பொழுது வைகோ – தம்பி கோபாலசாமியும் எங்களோடுதான் இருக்கிறார். நீங்கள் இருவரும் சென்று மாறனை அழைத்துக் கொண்டு கொழும்பிலே தங்கி அங்கிருந்து வவுனியாவுக்குச் சென்று – செல்வதற்கான ஏற்பாடுகளை விமானம் போன்ற வாகன வசதிகளை நான் செய்து கொடுக்கிறேன். சென்று வவுனியாவிலே இருக்கின்ற பிரபாகரனோடு பேசுங்கள். பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று சொன்னார். சொல்லிவிட்டு நீயும் கோபாலசாமியும் சென்றாலும் சரி. கோபாலசாமி என்று சொல்வதற்காக கண்ணப்பன் வருத்தப்படக் கூடாது. அப்பொழுதெல்லாம் அவருக்கு வைகோ என்று பெயரில்லை. அதனால் கோபாலசாமி என்றேன். நீயும் கோபாலசாமியும் சென்று பாருங்கள், அல்லது மாறனை அழைத்துச் செல். இருவரில் ஒருவரை அழைத்துச் செல்லுங்கள், அல்லது இருவரையும் அழைத்துச் சென்றாலும்

சரி என்று குறிப்பிட்டு ஒரு தேதியையும் சொல்லி இதற்குள்ளாக நீ சென்னை சென்றதும் எனக்கு பதில் அனுப்பு என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையே மறுநாள் காலையிலே டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு நட்வர்சிங் அவர்களை அனுப்பி வைக்கிறேன் அப்பொழுது அவர் வெளிநாட்டு விவகார இலாகாவிலே செயலாளராக இருந்தார். இன்றைக்கு புகழப்படுகின்ற நட்வர்சிங் அவர்கள் அன்றைக்கு செயலாளராக இருந்தார். அவர் காலையிலே தமிழ்நாடு இல்லத்திற்கு வந்தவர் 11.30 மணிவரை என்னிடத்திலே அளவளாவி இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி இதற்குப் பிறகு மீண்டும் நீங்கள் 2.30 மணிக்கு ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று கூறிவிட்டு போனார். அதன்படி ராஜீவ்காந்தி அவர்களைச் சந்தித்தேன். அவர் அப்பொழுது சொன்னார் – நீங்கள் நடத்திய பேச்சுவார்த்தை முழுவதும் நட்வர்சிங் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார், நான் சொன்னது அப்படியே உறுதி. நீங்கள் சென்னை சென்றவுடன் நான் சொன்னவாறு பயணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் நான் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார். இன்னும் சொல்ல வேண்டுமேயானால் அவர் அந்த உரையாடலுக்கிடையே குறிப்பிட்டது – எல்லோரிடத்திலும் அப்போது சொல்லியிருக்கின்றேன் – புதியதாகச் சொல்லவில்லை – பிரபாகரனை வெகுவாகப் புகழ்ந்தார். அவருடைய வீரத்திற்கு யாரும் ஈடு இல்லை என்றெல்லாம்கூட ராஜீவ்காந்தி அவர்கள் பிரபாகரனை அன்றைக்குப் புகழ்ந்தார். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

நான் மறுநாள் திரும்பி வந்து இங்கிருந்து ராஜீவ்காந்தி அவர்களிடத்திலே தொலைபேசி மூலமாகப் பேசி நீங்கள் சொன்னபடி நாங்கள் இலங்கைக்குச் சென்று ஏற்பாடுகளைக் கவனிக்க தயாராக இருக்கிறோம். கோபாலசாமிக்காக காத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன்.

அதற்குள் என்ன ஆயிற்று என்றால் தம்பி கோபாலசாமி அவர்கள் இலங்கைக்குச் சென்றுவிட்டார். அப்பொழுது இலங்கைக்குச் செல்லுகின்ற வழி நேரான வழியல்ல – எப்படியெல்லாம் செல்ல வேண்டும் – யார் யார் எப்படியெல்லாம் சென்றார்கள் என்று உங்களுக்குத் தெரியும் – அந்த வழியிலே அவர் சென்று விட்டார். உடனடியாக எனக்கு மிகுந்த வேதனையாகி விட்டது. எனக்கு ஒரு கடிதம் எழுதிவைத்து விட்டுத்தான் சென்றார். 'சொல்லாமல் செல்லுகிறேன் – இருந்தாலும் மன்னித்து விடுங்கள்' என்று செல்லுவதற்கான காரணங்களை அதிலே விளக்கி இருந்தார். பிறகு நான் ராஜீவ் அவர்களிடத்திலே இதைச் சொல்லி வருத்தம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமே என்பதற்காக நான் உடனடியாக அவரிடத்திலே வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டேன். நான் சென்னை செல்வதற்குள்ளாக அவர் இலங்கை சென்று விட்டார் என்றேன். ராஜ்ய சபாவிலேகூட அந்தப் பிரச்சினை வந்தது – எப்படி ஒரு எம்.பி. இப்படி இந்த வழியிலே செல்லலாம் என்று. அப்போதுகூட பெருந்தன்மையோடு ராஜிவ் காந்தி அவர்கள் ராஜ்ய சபாவிலே என்ன சொன்னார் என்றால் – அவர் போனதைப் பற்றிக் கவலையில்லை; பத்திரமாகத்

திரும்பினால் போதும் – என்று தான் ராஜீவ்காந்தி அந்த அவையிலேகூட சொன்னார். இது எல்லோருக்கும் தெரியும்.

அதற்குப் பிறகு நடந்தவைகள் உங்களில் யாரும் அறியாததல்ல. என்னென்னமோ நடந்து விட்டது. நான் அவர்களிடத்திலே அளித்த வாக்குறுதியின்படி யாரையும் அனுப்பி வைக்கக்கூடிய ஏற்பாடு நடைபெறவில்லை; பிறகு வேறொரு இடத்துக்குச் சென்ற வழியில் சென்னை விமான நிலையத்திலே ராஜீவ் தங்கி என்னை வருமாறு பணித்தார். நான் விமான நிலையத்திற்குச் சென்று அவரிடத்திலே பேசும்போதுகூட – என்ன நான் சொன்னது நடக்கவில்லையே – என்று கேட்டார். நான் வைகோ சென்ற விஷயத்தை அவரிடத்திலே சொல்லி, அதன் காரணமாக தேக்கம் ஏற்பட்டுவிட்டது என்பதை விளக்க விரும்பவில்லை. அத்தோடு பேச்சு முடிந்தது. பிறகு தொடருவோம் இந்த முயற்சியை என்று சொல்லிவிட்டுப் போனார். ஆனால் தொடர முடியாமலும், இலங்கை அரசாங்கத்திலே பல்வேறு குழப்பங்கள் – பிரேமதேசா பிரச்சினை போன்ற பிரச்சினைகள் எல்லாம் எழுந்து அன்றைக்கு தமிழ் ஈழத்திலே ஏற்பட்ட அந்த எழுச்சிக்கு ஒரு தடங்கல் ஏற்பட்டது. அதன்பின்னர் நடந்த விஷயங்கள் எல்லோரும் அறிந்தவைதான். ராஜீவ் அவர்கள் நம்முடைய தமிழ் மண்ணிலே இரத்தம் சிந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி அந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு இந்தியாவிலே இருந்த அனுதாபம், எழுச்சி, உணர்ச்சி, வேகம் இவைகளெல்லாம் எந்த அளவுக்கு மாய்ந்து போயின என்பதை கடந்த ஆண்டுக்கு சில மாதங்களுக்கு முன்பு இதே அவையில் அன்றைய

முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் படித்த அந்தத் தீர்மான வாசகங்களே போதும். எந்த அளவுக்கு அவர் அந்தப் பிரச்சினையை அணுகினார் – எவ்வளவு கோபத்தோடு – எவ்வளவு வெறுப்போடு அந்தப் பிரச்சினையை அணுகினார் – என்ன காரணம் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

அதனால்தான் ராஜீவ்காந்திக்குப் பிறகு – ராஜீவ்காந்திக்கு முன் என்று கி.பி. கி.மு. என்று பிரித்துக் கொள்வதைப்போல – இதைப் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். இருந்தாலுங்கூட இன்றையச் சூழ்நிலையில் நம்முடைய தமிழர்கள் தொப்பூழ்க்கொடி உறவு கொண்டவர்கள். நம்முடைய சகோதரர்கள் – நம்முடைய இன மக்கள் – இலங்கையிலே கொல்லப்படுகிறார்கள் – வேட்டையாடப் படுகிறார்கள் – பழி வாங்கப்படுகிறார்கள் என்ற இந்த செய்தி நமக்கு இனிப்பானதல்ல. நம்மை கணைகொண்டு தாக்குகின்ற அளவு மிக மோசமானது. அப்படிப்பட்ட செய்திகளை தாங்கிக் கொண்டு நாம் இன்றைக்கு இருப்பதற்கான காரணம் சில சூழ்நிலைகள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது – மறந்து விடவும் முடியாது.

இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்கிடையிலே தமிழ் மாணவர்கள், சிறார்கள், குழந்தைகள் காப்பகத்திலே கொடுமையாகக் கொல்லப் பட்டார்கள். விமான குண்டுவீச்சால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியால் இந்த அவையே அதிர்ந்துபோய் ஒரு அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அன்று

நான் இங்கே இல்லையென்றாலும்கூட அந்தத் தீர்மானம் இந்த அவையிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றால் அதுஒன்றே – ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழர்கள் இன ஒற்றுமையோடு இருப்பார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் என்று நான் கருதுகின்றேன். (பலத்த கைதட்டல்)

அதற்குப் பிறகு நம்முடைய கண்ணப்பன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இலங்கை அரசின் சார்பாகவும், சில அதிகாரிகள் சார்பாகவும் வந்துள்ள செய்திக்குறிப்பில் இது தவறான தீர்மானம் என்பது போல குறிப்பிடப் பட்டிருக்கிறது. தமிழன் கொல்லப்பட்டதை தமிழன் கண்டிப்பது தவறு என்றால் அந்தத் தவறை தமிழன் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பான் (பலத்த கைதட்டல்).

இது ஒன்றும் தவறான தீர்மானம் அல்ல. அவர்கள் இன்றைக்குச் சொல்லுகிறார்கள் – அவர்கள் குழந்தைகள் அல்ல – ஏதோ பயிற்சி பெற வந்தவர்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் இறந்து கிடக்கின்ற பிணங்களுடைய புகைப்படங்களைப் பார்த்தால் எல்லோரும் பாலகர்கள்தான், இளம்சிறார்கள் தான், இளம் மாணவர்கள் தான் – அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. அந்த பதில் அறிக்கையிலேகூட – இன்றைக்கு வந்திருக்கின்ற சமாதான அறிக்கையிலேகூட இலங்கை அரசின் கவனத்தைக் கவர ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சரியாகவோ தவறாகவோ ஒரு வாசகம் இருக்கிறது. ஆமாம்; கவனத்தைக் கவரத்தான், நாம் இந்தத் தீர்மானத்தை

நிறைவேற்றி இருக்கிறோம். இல்லாவிட்டால் அனுதாபத் தீர்மானத்தால் இறந்தவர்கள் பிழைத்துவிடுவார்கள் என்பதற்காக அனுதாபத் தீர்மானத்தை நாம் இங்கே நிறைவேற்றவில்லை. இந்தத் தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசின் கொடுமையைக் கண்டிக்கிறோம் என்று அவர்களுடைய கவனத்திற்காக சொல்லுகிறோம். அதேநேரத்திலே இன்னமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காக இந்திய அரசின் கவனத்தை கவர்வதற்காகவும் இந்தத் தீர்மானத்தை நாம் அன்றைக்கு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றி இருக்கின்றோம். எனவே, அந்தத் தீர்மானத்தினுடைய வாசகங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை அல்ல; உண்மையானவைதான்; உள்ள உறுதியோடு, வேதனையோடு வெளிப்பட்ட வார்த்தைகள்தான் அந்தத் தீர்மானத்திலே இருக்கின்ற வார்த்தைகள் என்பதை நான் எடுத்துச் சொல்லி, இதற்காக மேல்நடவடிக்கை என்ன எடுப்பது – இதைப் பற்றிய அணுகுமுறை என்ன இவைகளையெல்லாம் நான் மத்தியிலே இருக்கின்ற அரசுக்கு விட்டுவிட்டு அவர்கள் இதை கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தப் பிரச்சினையை இந்த அளவிலே முடிக்கலாம் என்று கருதுகின்றேன்.

<u>தொடர்ந்து எதிர்கட்சித் துணைத் தலைவர் திரு.ஓ.பன்னீர்செல்வம் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த பதில்</u>:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது; மேலும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். அன்றைக்குக்கூட விளக்கி இருக்கின்றேன். மத்திய சர்க்கார் மூலமாக இங்குள்ள தமிழர்களுக்கு – ஈழத் தமிழர்களுக்கு – அதாவது அகதிகளாக வந்துள்ள தமிழர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய்தான் கொடுக்கப் பட்டு வந்தது. அதைக்கூட நாங்கள் இப்பொழுது 400 ரூபாயாக மாநில அரசு சார்பாக 200 ரூபாய் உயர்த்தி வழங்கிக் கொண்டிருக்கின்றோம், மேலும் உதவிகள் செய்ய தயாராக இருக்கின்றோம். அவர்கள் புறப்பட்டு வரும்பொழுது வழியிலே எங்கே சென்று அவர்களை அழைத்து வருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை; அந்தப் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்பதை கடற்படை அதிகாரிகளோடு கலந்துபேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.